# “கலைஞர்” - என்றும் மறையாத சொல்!



அடுப்படியில் இருந்த கைகள்
அரசியலையும் பொருளாதாரத்தையும் கற்க செய்தாய்...

விடியல் வேண்டும் என்று
மகளிர் சுயஉதவிக் குழுக்களை விதைத்தாய்...

ஒரு பெண்ணின் சேமிப்பில்
ஒரு குடும்பத்தின் எதிர்காலம் என்றாய்...

ஒரு பெண்ணின் தன்னம்பிக்கையில்
ஒரு சமூகத்தின் மறுமலர்ச்சி என்றாய்...

108 என்ற மூன்று இலக்கத்தில்
எத்தனை உயிர்களின் மூச்சை காப்பாற்றினாய்...

அழைத்தவுடன் வரும் ஆம்புலன்ஸில் எத்தனை
குடும்பங்களின் நம்பிக்கையை காப்பாற்றினாய்...

மண் பேசும் மொழிக்கொரு
மன்னவன் வந்தாய்...

மக்கள் பேசும் உரிமைக்கு
முன்னவன் நின்றாய்..

"தமிழ்" என்ற மூன்றெழுத்தில்
தன் உயிரை வைத்தாய்...

"சமநீதி" என்ற சொல்லுக்கு
சட்டத்தின் வடிவம் தந்தாய்...

பேனா பிடித்த விரல்களில்
புரட்சியின் மை இருந்தது...

நீவீர் பேசிய ஒவ்வொரு சொல்லிலும்
புதிய தமிழகக் கனவு இருந்தது...

ஆளுநர் ஏற்றும் கொடியை
முதல்வன் ஏற்றச் செய்தாய்...

மாநிலத்தின் உரிமை என்பது
மக்களின் உரிமை என்றாய்...

மனிதனை மனிதனே இழுக்கும்
கைரிக்ஷா காலம் முடித்தாய்...
உழைப்பவனின் கரங்களில்
சக்கரத்தைத் தந்தாய்...

வயலில் வியர்வை சிந்தியவன்
வானத்தைப் பார்த்த காலம் போய்...

விவசாயியின் மின்மோட்டாரில்
விடியலை ஓடவிட்டாய்...

பெண்ணுக்கு உரிமை என்றால்
வார்த்தையல்ல வாழ்வுரிமை என்றாய்...

மகளுக்கும் சொத்தில் பங்கு என்ற
மாற்றத்தின் கையெழுத்து தன்னுடையது...

சென்னையின் வானில்
கட்டிடங்கள் மட்டும் எழவில்லை...

கணினித் திரைகளுக்குள் நவீன தமிழ்நாட்டை
உருவாக்கினாய்...

கோடிக்கணக்கான படித்த
இளைஞர்களுக்குள் பல கனவுகள் எழுந்தன...

டைட்டல் பூங்காவின் கதவுகளை திறந்தபோது...

தமிழக இளைஞனின் கைகளில்
உலகத்தின் வேலைவாய்ப்புகள் வந்து குவிந்தன...

இடஒதுக்கீடு என்ற ஏணியில்
எத்தனை தலைமுறைகளை ஏற்றினாய்...

கல்வி என்ற விளக்கில்
எத்தனை இருட்டுகள் ஓடின...

தமிழ்நாட்டில் தாங்கள் கட்டியது கட்டிடங்கள்
அல்ல...

கட்டிடக்கலையில் நீவீர்! கரிகால் சோழனை
மிஞ்சினாய்...

நீ...எழுதிய இலக்கியத்தையும், நீபடைத்தவரலாற்று
சாதனைகளையும் இனி...?

ஆம் "கலைஞர்" என்ற சொல் இவ்வுலகில் என்றும்
மறையாத சொல்!



மருத்துவர்.ப.முருகதாஸ்
விருத்தாசலம்.

---

### மயிலை த.வேலு வழங்குகிறார்! முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாள்!

## மயிலை 126வது வட்டத்தில் அறுசுவை உணவு!

### கோ. கண்ணன் தலைமையில்! எஸ்.முரளி முன்னிலையில்!

சென்னை ஆக. 7

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்கு பகுதி, 126வது வட்டத்தில், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு முத்தமிழறிஞர் திருவுருவப் படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி இன்று (வெள்ளிக்கிழமை) காலை 11 மணியளவில் மந்தவெளி, பஸ் நிலையம் அருகில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழகச் செயலாளர் அண்ணன் மயிலை த. வேலு அவர்கள் கலந்துகொண்டு அறுசுவை உணவு வழங்க உள்ளார்.

மயிலை126வது வட்டத்தில் நமது முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு நடைபெறும் இந் நிகழ்ச்சிக்கு வட்டக் கழக செயலாளர் கோ. கண்ணன் அவர்களன் தலைமையில், பகுதி கழக செயலாளர் எஸ் முரளி அவர்களின் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இ ந் நி க ழ் ச் சி யை தொடர்ந்து, நமது வட்டக் கழகத்தில் உள்ள பாகங்களில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து நமது கழகத் தொண்டர்கள், முத்தமிழ் அறிஞரை நினைவு கூறுகிறார்கள் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே இந்நிகழ்ச்சியில் நமது மாநில மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள் பகுதி கழக நிர்வாகிகள் மாவட்ட அணிகளைச் சார்ந்த நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் வட்ட கழகத்தைச் சார்ந்த அனைத்து நிர்வாகிகள், அணிகளை சார்ந்த அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணியினர் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் கோ. கண்ணன் அறிவித்துள்ளார்.

---

### க.கோவிந்தராஜ் தலைமை! மெட்டில்டா கோவிந்தராஜ் எம்.சி – சி.பி.திருமலை முன்னிலை!

## அண்ணாநகர் 101 வது வட்ட தி.மு.க. சார்பில் 500 பேருக்கு அறுசுவை உணவு!

### நே.சிற்றரசு – தயாநிதி மாறன் – எம்.கே.மோகன் – ச.பரமசிவம் – கார்த்திக் மோகன் பங்கேற்பு!

சென்னை, ஆக. 07 -

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு இன்று (07.08.2026 - வெள்ளிக்கிழமை) மதியம் 12 மணியளவில், அண்ணா நகர், வ.உ.சி. நகர் மெயின் ரோட்டில் 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டு நினைவஞ்சலி செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் தலைமை வகிக்கிறார்.

101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 (அ) வட்டக் கழகச் செயலாளர் சி.பி.திருமலை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், தலைமை செயற்குழு உறுப்பினர், முன்னாள் அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், அண்ணா நகர் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிகழ்ச்சி நடைபெறும் இடங்கள் வருமாறு:-

டி.பிளாக், பாரத் பிளாட், கெனால் ரோடு, கிழ்ப்பாக் கார்டன், மண்டபம் ரோடு, பள்ளி அரசு தெரு, குஜ்ஜி தெரு, வ.உ.சி. நகர் மெயின் ரோடு ஆகியோர் இடங்களில் நடைபெறுகிறது.

இவ்வாறு 101 வது வட்டக் கழகச் செயலாளர் க. கோவிந்தராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### மயிலை மேற்கு பகுதி கழகம் சார்பில்

## கலைஞர் நினைவு நாள் - அறுசுவை உணவு!

### பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. அறிக்கை!

சென்னை, ஆக. 07-

சென்னை தென் மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி கழக சார்பில் சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு ஆலோசனைப்படி

மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. தலைமையில் இன்று (7/8/2026- வெள்ளிகிழமை) மதியம் 12:00 மணியளவில் 122வது வட்டம் ஆழ்வார் பேட்டை தெரு அண்ணா சிலை அருகில் அறுசுவை உணவு வழங்குதல் நடைபெறுகிறது.

முன்னிலை அவைத் தலைவர் ஜி.ஆர்.ராஜேந்திரன் பகுதி துணைச் செயலாளர்கள் :

ஆர் எல் வி அசோக்குமார், பா பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநாதன், பகுதி பொருளாளர் ஜி.முருகையன்

வரவேற்புரை வட்ட கழக செயலாளர்கள் டி ராஜவேலு , சீ.கிருஷ்ணமூர்த்தி, எஸ் ஆர் ராஜா சுரேஷ்குமார், ஆ நாகராஜன், மூ.இ. ஏழுமலை, மூ.இராஜேந்திரன்

இதில் மாநில நிர்வாகிகள் , மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக பொறுப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி எம்.சி. அறிக்கை விடுத்துள்ளார்.

---

### தினகரன் சண்முகம் ஏற்பாட்டில் எம்.ரூபன் தலைமையில் வே.ராஜன் முன்னிலை!

## மதுரவாயல் 146 வது வட்டத்தில் 1000 பேருக்கு அறுசுவை உணவு!

### முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி வழங்குகிறார்!

சென்னை, ஆக. 07 -

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 146 வது வட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மற்றும் முன்னாள் வில்லிவாக்கம் ஒன்றியக் கழகச் செயலாளர், முன்னாள் மதுரவாயல் நகர் மன்றத் தலைவர், முன்னாள் தலைமை செயற்குழு உறுப்பினர், 146 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஆலப்பாக்கம் கு.சண்முகம் ஆகியோரின் நினைவு நாளை முன்னிட்டு 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் விழா இன்று (07.08.2026 - வெள்ளிக்கிழமை) பகல் 12 மணியளவில், ஆலப்பாக்கம் பாரதிதாசன் நகரில் நடைபெறுகிறது.

மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் தினகரன் சண்முகம் ஏற்பாட்டில் 146 வது வட்டக் கழகச் செயலாளர் எம். ரூபன் தலைமையில் மதுரவாயல் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர், மண்டலக் குழுத் தலைவர் வே. ராஜன் முன்னிலையில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி முத்தமிழ் அறிஞர் கலைஞர் மற்றும் ஆலப்பாக்கம் கு.சண்முகம் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தி 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்குகிறார்.

எனவே 146 வது வட்டத்திற்குட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இவ்வாறு 146 வது வட்டக் கழகச் செயலாளர் மதுரவாயல் எம்.ரூபன் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

### ஜெ.நடராஜன் ஏற்பாடு! என்.சந்திரன் எம்.சி, தலைமை!

## 167வது வட்டத்தில் கலைஞர் நினைவுநாள்! 500 பேருக்கு காலை சிற்றுண்டி!

### மாவட்டச் செயலாளர் தா.மோ. அன்பரசன் – ஆர்.எஸ்.பாரதி வழங்குகின்றனர்!

சென்னை, ஆக.7-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8-ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் தெற்குப் பகுதி சார்பில் பகுதிச் செயலாளர் - மண்டலக்குழுத் தலைவர் என்.சந்திரன் தலைமையில் 167-வது வட்டச் செயலாளர் ஜெ.நடராஜன் ஏற்பாட்டில் இன்று (7.8.2026) காலை 7 மணிக்கு எம்.ஜி.ஆர். ரோடு ஜே.கே. மஹால் எதிரில் 500 நபர்களுக்கு காலை சிற்றுண்டியை மாவட்டச் செயலாளர் தா. மோ. அன்பரசன், கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி ஆகியோர் வழங்குகின்றனர்.

எனவே, ஆலந்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக் குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக பிரதிநிதிகள், பகுதி வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டச் செயலாளர் ஜெ.நடராஜன் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

### கழகத் தலைவர் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவுநாள் பேரணி!

## சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணியினர் திரளாக பங்கேற்பீர்!

### மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் அழைப்பு!

சென்னை,ஆக.7-

சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன் குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

மானமும்அறிவும் திராவிட மண்ணின் பெருமை என மக்கள் நெஞ்சில் விதைத்த திராவிட கொள்கை போராளி

அன்னை தமிழ்நாட்டின் கலங்கரை விளக்கம் ஐந்து முறை அன்னை தமிழ் நாடாண்ட அறிவாசான் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாள் 07082026 வெள்ளிக்கிழமை காலை 8:00 மணியளவில் கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் கழக இளைஞர் அணி செயலாளர் தமிழகத்தின் எதிர்கட்சி தலைவர் தமிழகத்தின் நாளைய அடையாளம் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னிலையில் சென்னை அண்ணா சாலை ஓமந்தார் வளாகத்தில் அமைந்துள்ள கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு மெரினா கடற்கரையில் அமைந்துள்ள ஐயா கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து கழக தலைவர் அவர்கள் அஞ்சலி செலுத்துகின்றார்..

எனவே சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் ஒன்றியம்,பகுதி,பேரூர்,கழகத்தின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வார்டு ,கிளை அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பாக அமைப்பாளர்கள் கழக இளைஞர் அணி தோழர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்!!!!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

### பூந்தமல்லி நகராட்சி வளர்ச்சியை முடக்கும் அதிகாரிகள் –

## த.வெ.க. ஆட்சியில் உள்ளாட்சி நிர்வாகம் புறக்கணிக்கப்படுவதாக நகர்மன்றத்தில் தி.மு.க உறுப்பினர்கள் கடும் குற்றச்சாட்டு!

திருவள்ளூர்ஆக 07:

திருவள்ளூர்மாவட்டம்பூந்தமல்லி நகராட்சியில் வளர்ச்சிப் பணிகள் தொடர்ந்து மந்தமடைந்து வருவதற்கு அதிகாரிகளின் ஒத்துழைப்பின்மையே முக்கியக் காரணம் என்றும், த.வெ.க. அரசு பொறுப்பேற்ற பிறகு உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளில் தேவையற்ற தலையீடு அதிகரித்துள்ளதாகவும் நகர்மன்றக் கூட்டத்தில் திமுகவைச் சேர்ந்த உறுப்பினர்கள் கடும் அதிருப்தி தெரிவித்தனர்.

நகர்மன்றக் கூட்டத்தில் பேசிய உறுப்பினர்கள், பூந்தமல்லி நகர் மன்றத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் பெரும்பாலான கவுன்சிலர்கள் மக்களால் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்றாலும், மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்கான நிர்வாக ஒத்துழைப்பை அதிகாரிகள் வழங்கத் தவறி வருவதாக குற்றம்சாட்டினர். இதன் விளைவாக குடிநீர் வழங்கல், சாலை மேம்பாடு, மழைநீர் வடிகால், தெருவிளக்குகள், துப்புரவுப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நலப் பணிகள் திட்டமிட்ட வேகத்தில் நடைபெறாமல் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

மேலும், மக்களின் வரிப்பணத்தில் செயல்படும் நகராட்சியில் அதிகாரிகள் மக்கள் பிரதிநிதிகளின் கருத்துகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கவில்லை என்றும், நகர்மன்றக் கூட்டங்களில் முக்கிய அதிகாரிகள் தொடர்ந்து பங்கேற்காதது நிர்வாக அலட்சியத்தை வெளிப்படுத்துவதாகவும் உறுப்பினர்கள் விமர்சித்தனர். மக்கள் முன்வைக்கும் அன்றாட பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டிய நிலையில், அதிகாரிகளின் இந்த அணுகுமுறை உள்ளாட்சி அமைப்புகளின் செயல்திறனை பாதிப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

த.வெ.க. அரசு பொறுப்பேற்ற பிறகு, திமுக நிர்வாகம் உள்ள நகராட்சிகளில் வளர்ச்சிப் பணிகள் திட்டமிட்டு தாமதப்படுத்தப்படுகின்றன என்ற சந்தேகம் பொதுமக்களிடையே எழுந்துள்ளதாகவும், இது போன்ற நிலை தொடர்ந்தால் மக்களே நேரடியாக பாதிக்கப்படுவார்கள் என்றும் உறுப்பினர்கள் கூறினர். அரசியல் வேறுபாடுகளை காரணமாகக் கொண்டு உள்ளாட்சி நிர்வாகத்தின் செயல்பாடுகள் பாதிக்கப்படக் கூடாது; மக்களின் நலனே முதன்மையாக இருக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

இதற்கு பதிலளித்த நகர்மன்றத் தலைவர், உறுப்பினர்கள் முன்வைத்த அனைத்து கோரிக்கைகளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்றும், நிலுவையில் உள்ள வளர்ச்சிப் பணிகளை விரைவுபடுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

---

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாள் பேரணி !

## திருவொற்றியூர் மேற்கு பகுதி கழகத்தினர் திரளாக கலந்து கொள்வீர்!

### மாவட்டச் செயலாளர் எஸ். சுதர்சனம் – பகுதிச் செயலாளர் வை.ம. அருள்தாசன் வேண்டுகோள்!

சென்னை,ஆக.7-

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் இளந்தலைவர் கழக இளைஞரணி செயலாளர் முன்னிலையில் 782026 காலை 8:00 மணியளவில் சென்னை அண்ணா சாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள கலைஞர் திருவுருவ சிலை முன்பிருந்து காமராஜர் சாலை கலைஞர் நினைவிடம் வரை அமைதி பேரணி நடைபெற உள்ளது.

அது சமயம் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் அவர்கள் வழிகாட்டுதலில் திருவொற்றியூர் மேற்கு பகுதிக்கு உட்பட்ட கழகத்தினர் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம அருள்தாசன் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

உலகமெல்லாம் வாழும் தமிழர்களின் ஒட்டுமொத்த உயர்வுக்காகவும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும் தமிழ் மொழிக்காகவும் ஓய்வின்றி உழைத்த முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டின் நினைவு நாளில் திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் 782026 காலை 11:00 மணியளவில் லிப்டி கேட் ரவுண்டானா அருகில்

பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் அவர்கள் ஏற்பாட்டில் 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்ஏபி எல்.,,எக்ஸ். எம்எல்ஏ, அவர்கள் பங்கேற்று வழங்குகிறார்.

இந்நிகழ்விற்கு மாநில, மாவட்ட, பகுதி,வட்ட கழக நிர்வாகிகள் , வட்ட கழக செயலாளர், மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் BLA &2, BLC, BDA, BYA அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### கழகத் தலைவர் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் பேரணி

## தியாகராயர் நகர் கிழக்கு - மேற்கு பகுதி கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

### பகுதிச் செயலாளர்கள் கே.ஏழுமலை எம்.சி., – கோ.சு.மணி வேண்டுகோள்!

சென்னை,ஆக.7-

தியாகராய நகர் கிழக்கு மேற்கு பகுதிச் செயலாளர்கள் கே.ஏழுமலை எம்.சி., - கோ.சு. மணி ஆகியோர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

சென்னை தென் மேற்கு மாவட்டம் தியாகராய நகர் கிழக்கு மேற்கு பகுதி செயலாளர்கள் கே. ஏழுமலை.Mc கோ.சு.மணி அறிக்கை வருமாறு. நவீன தமிழகத்தை கட்டமைத்த சிற்பி இனம் மொழி காக்க இறுதி மூச்சு வரை உழைத்திட்ட தமிழர்களின் தகை சால் தலைவர் தமிழர் தம் நெஞ்சங்களில் நிரந்தரமாக வாழ்ந்து கொண்டிருக்கும் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு ஆகஸ்ட் 7 வெள்ளிக்கிழமை அன்று காலை 8 மணி அளவில் கழகத் தலைவர் மு க ஸ்டாலின் அவர்களின் தலைமையில் சென்னை அண்ணா சாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் சிலை அருகில் இருந்து புறப்பட்டு காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர் பாளையம் வைத்து அஞ்சலி செலுத்துகிறார். திமுக கழகத்தினர் முன்னே பங்கேற்கின்றனர்.

எனவே சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராய நகர் கிழக்கு மேற்கு பகுதி கழகத்திற்கு உட்பட்ட மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் அனைத்து அணிகளின் மாவட்ட அ மை ப் பா ள ர் க ள் துணை அமைப்பாளர்கள் வட்டக் கழகச் செயலாளர்கள் பகுதி கழக நிர்வாகிகள் மாவட்டக் கழக உறுப்பினர்கள் மாமன்ற உறுப்பினர்கள் அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கிளைக் கழக நிர்வாகிகள் வட்ட கழக இளைஞர் அணி நிர்வாகிகள் BLA2 BDA மற்றும் ஆற்றல் மிக்க செயல்வீரர்கள் வீர மிக்க வீராங்கனைகள் அனைவரும் திரளாக கலந்து கொள்ளும்படி தியாகராய நகர் மேற்கு பகுதி செயலாளர் கே. ஏழுமலை.M.c தியாகராய நகர் கிழக்கு பகுதி பொறுப்பாளர் கோ.சு. மணி ஆகியோர் கேட்டுக்கொள்கிறார்கள்.

---

### சென்னை வடக்கு திட்ட மின் கழக தொ.மு.ச. சார்பில்

## முத்தமிழறிஞர் கலைஞர் நினைவுநாள்! 300 பேருக்கு அறுசுவை உணவு!

### சென்னை வடக்கு மின் கழக தொமுச செயலாளர் கே.சசிகுமார் வேண்டுகோள்!

சென்னை,ஆக.7-

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் 7 ஆண்டு நினைவு நாள் முன்னிட்டு சென்னை வடக்கு திட்ட மின் கழக தொமுச சார்பில் 300 பேருக்கு அறுசுவை உணவு தண்டையார்பேட்டை கோட்டம், திருவொற்றியூர் பிரிவு அலுவலகம் (அஜாக்ஸ் பேருந்து நிலையம் அருகில்) காலை 10.30 மணிக்கு வழங்கப்படுகிறது.

தமிழ் நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சென்னை வடக்கு திட்ட கோட்ட, கிளை சங்க நிர்வாகிகளுக்கு வேண்டுகோள் நமது உயிரினும் மேலான அன்புத் தலைவர், மின் வாரிய தொழிலாளர்களின் பாதுகாவலராக திகழ்ந்தவர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளான ஆகஸ்ட் 7 அன்று, சென்னை வடக்கு தி ட் ட த் தி ற் கு ட் ப ட் ட அனைத்து திட்ட, கோட்ட, கிளை மற்றும் பிரிவு அலுவலகங்களிலும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி புகழ் அஞ்சலி செலுத்தி, நலத்திட்ட உதவிகள் மற்றும் பொதுமக்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சிகளை நடத்துமாறு கே.சசிகுமார் கேட்டுக்கொள்கிறார்.

---

### கழகத் தலைவர் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவுநாள் பேரணி!

## ஆலந்தூர் தெற்குப் பகுதி கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

### பகுதிச் செயலாளர் என்.சந்திரன் எம்.சி. அறிக்கை!

சென்னை,ஆக.7-

12-வதுமண்டலக்குழுத் தலைவர் ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர் என்.சந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

அன்னை தமிழ்நாட்டின் கலங்கரை விளக்கம் ஐந்து முறை அன்னை தமிழ் நாடாண்ட அறிவாசான் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாள் 07082026 வெள்ளிக்கிழமை காலை 8:00 மணியளவில் கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் கழக இளைஞர் அணி செயலாளர் தமிழகத்தின் எதிர்கட்சி தலைவர் தமிழகத்தின் நாளைய அடையாளம் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னிலையில் சென்னை அண்ணா சாலை ஓமந்தார் வளாகத்தில் அமைந்துள்ள கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு மெரினா கடற்கரையில் அமைந்துள்ள ஐயா கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து கழக தலைவர் அவர்கள் அஞ்சலி செலுத்துகின்றார்..

எனவே, ஆலந்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக பிரதிநிதிகள், பகுதி வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டச் செயலாளர் ஜெ.நடராஜன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.